உதகமண்டலம் மாவட்ட நீதிமன்றத்தில் **2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் 7–ஆம் நாள்** வாதி / பிரதிவாதி/ மனுதாரர்/எதிர்மனுதாரர் என்பவரின் சாட்சியாகிய **பி.வா.சா.2**–ன் வாக்குமூலம் 1969–ஆம் ஆண்டு 44வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி திரு.சி.சிங்காரம், சிரஸ்ததார், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| C.O.S. No | : | 1 of 2023 |
| பெயர் | : | அரவிந்த் ராஜ் |
| தந்தை /கணவர் பெயர் | : | |
| வயது | : | |
| தொழில் | : | |
| கிராமம் | : | |
| தாலுக்கா | : | |

---

தேதி : 7.10.2025.

D.W.2

**<u>பி.வா.சா.2 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, முதல் விசாரணை</u>:**

நான் வழக்கறிஞராக தொழில் புரிந்து வருகிறேன். நான் தற்போது சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பிராக்டிஸ் செய்து வருகிறேன். எனது சொந்த ஊர் ஊட்டியாகும். நான் 2021ஆம் ஆண்டு சட்ட படிப்பை முடித்தேன், முடித்த பிறகு Enrollment செய்யும்வரை ஊட்டியில் உள்ள வழக்கறிஞரான என் தந்தை திரு.ஆனந்தன் அலுவலகத்தில் Intenஆக பணி புரிந்து வந்தேன். நான் 7.4.2022ஆம் தேதி வழக்கறிஞராக Enroll செய்தேன். என் தகப்பனார் வழக்கறிஞர் திரு.ஆனந்தனின்

அலுவலகம் Apple Cottage, Commercial Road, Ooty என்ற விலாசத்தில் இருக்கிறது. நான் Enroll செய்தபிறகு சுமார் 1 ½ ஆண்டுகள் ஊட்டியில்தான் வழக்கறிஞராக பிராக்டிஸ் செய்து வந்தேன்.

2. நான் ஊட்டியில் பிராக்டிஸ் செய்தபோது சுப்ரமணியன், சிவலிங்கம் ஆகியோர்கள் அவர்கள் வியாபாரம் சம்பந்தமாக சமரசம் செய்ய வேண்டும் என்று சொல்லி என்னிடம் வந்தார்களா என்று கேட்டால், அவர்கள் என் அலுவலகத்திற்கு வந்தார்கள், ஆனால் சமரசம் செய்ய வரவில்லை, சுப்ரமணியன் அவருடைய Creditors களுக்கு அவருக்கு சிவலிங்கத்திடம் இருந்து வரவேண்டிய தொகையை காண்பிக்க வேண்டும் என்று கேட்டார், சுப்ரமணியம் ஒரு ஒப்பந்தம் எழுத வேண்டும் என்று சொன்னார், அது Sham and nominal agreement ஆகும், அதை செயல்படுத்த வேண்டியதில்லை என்று சொன்னார்கள், நான் சுப்ரமணியத்திடம் அவருக்கு சிவலிங்கத்திடம் இருந்து வரவேண்டிய தொகை எவ்வளவு என்று கேட்டபோது சுப்ரமணியம் என்னிடம் ரூபாய் 25,00,000/- முதல் ரூபாய் 26,00,000/-வரை சிவலிங்கத்திடம் இருந்து வரவேண்டும் என்று சொன்னார், ஆனால் சுப்ரமணியம் அந்த ஒப்பந்தத்தில் தொகையை சற்று கூடுதலாக போட வேண்டும் என்று சொன்னார், சுப்ரமணியம் அவருடைய Creditorsகளுக்கு சிவலிங்கத்திடம் இருந்து வரவேண்டிய தொகை அதிகமாக இருப்பதாக காட்டுவதற்காகதான் ஒப்பந்தத்தில்

கூடுதலாக தொகையை போடச்சொன்னார், அப்போது நான் சிவலிங்கத்திடம் இதற்கு உங்களுக்கு ஆட்சேபனை எதுவும் இல்லையா என்று கேட்டேன், அதற்கு சிவலிங்கம் என்னிடம் இதற்கு முன்பு தனக்கும், சுப்ரமணியத்திற்கும் ஒரு தொழில் நடந்து இருக்கிறது, அதற்கு சுப்ரமணியன் உதவி செய்தார், அதனால் தனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்று கூறினார். நான் அந்த ஒப்பந்தத்தை என் அலுவலகத்தில் உள்ள கணினியில் ஏற்கனவே கணினியில் இருந்த இதுபோன்ற ஒப்பந்த பார்மட்டை சற்று மாடிபை செய்து சுப்ரமணியனுக்கும், சிவலிங்கத்திற்கும் ஒப்பந்தம் தயார் செய்து கொடுத்தேன். அந்த ஒப்பந்தத்தை தயார் செய்வற்கு முத்திரை தாளை சுப்ரமணியன் வாங்கி வந்தார், அதில் சுப்ரமணியன் பெயரும், சிவலிங்கம் பெயரும் இருந்தது, அதாவது வாங்கி வரப்பட்ட 2 முத்திரை தாள்களில் ஒரு முத்திரை தாளில் சுப்ரமணியன் பெயரும், மற்றொரு முத்திரை தாளில் சிவலிங்கம் பெயரும் இருந்தது. எங்கள் அலுவலகத்திற்கு சுப்ரமணியனும், சிவலிங்கமும் வந்தபோது அவர்கள்கூட இன்னொருவர் வந்தார், அவரை எனக்கு ஞாபகம் இல்லை. நான் ஒரே ஒப்பந்தத்தை ஒரு முத்திரை தாளில் சுப்ரமணியன் பெயரிலும், மற்றொரு முத்திரை தாளில் சிவலிங்கம் பெயரும் தயார் செய்து கொடுத்தேன். அந்த ஒப்பந்தத்தில் சுப்ரமணியனும், சிவலிங்கமும் கையொப்பம் போட்டார்கள், சாட்சியாக மற்றொருவர் கையொப்பம் போட்டார்,

அவர் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் Exhibit A4 தான் நான் தயார் செய்து கொடுத்த அந்த ஒப்பந்தமா என்று கேட்டால், ஆமாம்.

3. நான் தயார் செய்த 2 ஒப்பந்தங்களையும் சுப்ரமணியத்திடம் கொடுத்தேன். அதில் ஒரு ஒப்பந்தத்தை சுப்ரமணியன், சிவலிங்கத்திடம் கொடுத்தாரா என்று கேட்டால், அது எனக்கு தெரியவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் Exhibit A4 ஒப்பந்தத்தில் 1வது சாட்சியின் கையொப்பத்திற்கு கீழ் இருக்கும் மற்றொரு கையொப்பம் என் முன்பு போடப்பட்டதா என்று கேட்டால், அது என் முன்பு போடப்படவில்லை, இதை நான் உறுதியாக கூறுவதற்கு காரணம் என்ன என்றால், சுப்ரமணியன் மற்றும் சிவலிங்கத்தோடு ஒருவர் மட்டும்தான் வந்தார் அதனால் நான் அவரை கீழே சாட்சியாக கையொப்பம் போடச்சொன்னேன்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>:

நான் தயார் செய்து கொடுத்த Exhibit A4 ஒப்பந்தத்தில் சுப்ரமணியன் அவருடைய Creditorsகளுக்கு சிவலிங்கத்திடம் இருந்து வரவேண்டிய தொகை அதிகம் என்று காட்டுவதற்காக அந்த ஒப்பந்தத்தில் தொகை கூடுதலாக போடப்பட்டுள்ளதாக வாசகம் எதுவும் இல்லை என்று சொன்னால், அந்த வாசகம் இல்லை. நானும், என் தகப்பனாரான வழக்கறிஞரும்

இரண்டுபேரும் சேர்ந்துதான் சுப்ரமணியம் மற்றும் சிவலிங்கத்திற்கிடைய சமரசம் பேசி தொகையை நிர்ணயம் செய்து Exhibit A4 ஒப்பந்தத்தில் அத்தொகையை போட்டுள்ளோம் என்றும், தற்போது நான் சிவலிங்கம் என்னிடம் கேட்டதற்காக அதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியில்லை. சுப்ரமணியனும், சிவலிங்கமும் இருவருமே சம்மதித்துதான் Exhibit A4 ஒப்பந்தத்தில் அவர்களுக்கு தெரிந்த ஒருவரிடம் 2வது சாட்சியாக கையொப்பம் பெற்றுள்ளார்கள் என்று சொன்னால், இருக்கலாம்.

N. MURALIDHARAN

Digitally signed by N. MURALIDHARAN
Date: 2025.11.07 14:35:47 +0530